imha independent mental health advocacy

Tamil / தமிழ்

# உங்கள் உரிமைகளை அறிந்து கொள்ளுங்கள், உங்கள் கருத்தைத் தெரிவியுங்கள்

**செப்டெம்பர் 2023**

Independent Mental Health Advocacy (சுதந்திரமான மனநலப் பரிந்துரைப்பு) (IMHA) ஆனது, உங்கள் உரிமைகளை அறிந்து கொள்ளவும், உங்கள் கருத்தைத் தெரிவிக்கவும் உதவும். IMHA ஆனது, கீழே குறிப்பிடப்பட்டுள்ள மக்களுக்கான ஒரு இலவச மற்றும் அந்தரங்கமான பரிந்துபேசும் சேவையாகும்:

- கட்டாய சிகிச்சை பெறுகின்றவர்கள், அல்லது
- கட்டாய சிகிச்சை பெறுவது குறித்து கவலையில் உள்ளவர்கள்.

IMHA என்பது Victoria Legal Aid இனால் வழங்கப்படும் ஒரு சேவையாகும், ஆனால் இது சட்டசேவை அல்ல. IMHA மனநலச் சேவைகளிலிருந்து தனித்து இயங்குகின்றது.

## நாங்கள் உங்களை தொடர்புகொள்வோம்

செப்டெம்பர் 1, 2023 நிலவரப்படி, Mental Health and Wellbeing Act 2022 (மனநலம் மற்றும் நல்வாழ்வுச் சட்டம் 2022) (Vic) நீங்கள் கட்டாய சிகிச்சை பெறும்போது முக்கிய நிலைகளில் எங்களுக்கு தெரிவிக்கப்படும் என்று கூறுகிறது. இந்த ஆவணத்தின் *'IMHA இற்கு எப்போது அறிவிக்கப்படும்?'* என்னும் பகுதியில் இது பற்றி மேலும் அறிக.

தொடர்புகொள்ள வேண்டாம் என்று நீங்கள் சொல்லும் வரை நாங்கள் உங்களைத் தொடர்புகொள்வோம். நாங்கள் உங்களைத் தொடர்பு கொள்ளும்போது, நாங்கள் என்ன செய்கின்றோம் என்பதை உங்களுக்கு விளக்குவோம், மேலும் எங்கள் சேவைகள் உங்களுக்கு வேண்டுமா என்பதை நீங்கள் தீர்மானிக்கலாம். எங்களைத் தொடர்பு கொள்ள வேண்டாம் என்று கூறுவதற்கு, இந்தத் தாளின் 'உங்களைத் தொடர்பு கொள்ள வேண்டாம் என்று எம்மிடம் கூறுங்கள்' எனும் பகுதியைப் பார்க்கவும்.

## நீங்கள் எங்களை தொடர்பு கொள்ளலாம்

நீங்கள் தற்போது, கட்டாய சிகிச்சையைப் பெறாவிடினும், ஆனால் கட்டாய சிகிச்சையைப் பெறுவது பற்றி கவலைப்படுகிறீர்கள் என்றால், நீங்கள் தொடர்ந்தும் IMHA சேவைகளைப் பெறலாம். எங்களுக்கு அறிவிக்கப்படமாட்டாது என்பதால் நீங்கள் எங்களை நேரடியாக தொடர்புகொள்ள வேண்டும். 1300 947 820 எனும் இலக்கத்தில் எங்களை அழைக்கலாம், எங்கள் வலைத்தளம் www.imha.vic.gov.au, இனைப் பார்வையிடலாம் அல்லது imhacontact@imha.vic.gov.au இற்கு மின்னஞ்சல் அனுப்பலாம்.

உங்கள் சிகிச்சைக் குழுவுடன் நீங்கள் கருத்து வேறுபாடு கொள்ள முடியாது போன்ற உணர்வு அல்லது நீங்கள் ஏதாவது செய்யாவிட்டால் கட்டாய சிகிச்சைக்கு உட்படுத்தப்படுவீர்கள் என்று உங்கள் சிகிச்சை குழு கூறியது, போன்றவை கட்டாய சிகிச்சையைப் பெறுவதைப் பற்றி மக்கள் கவலைப்படுவதற்கான பொதுவான காரணங்களில் உள்ளடங்கும்.

## IMHA உங்களை எவ்வாறு ஆதரிக்கலாம்

நாங்கள் உங்களை ஆதரிக்க முடியும்:

- உங்கள் மதிப்பீடு, சிகிச்சை, பராமரிப்பு மற்றும் குணமாதல் பற்றிய தகவல்களைப் புரிந்து கொள்வதற்கு
- உங்கள் மதிப்பீடு, சிகிச்சை மற்றும் பராமரிப்பு பற்றிய முடிவுகளை எடுப்பதற்கு
- உங்கள் உரிமைகளைப் புரிந்துகொண்டு அவற்றைச் செயற்படுத்துவதற்கு
- விருப்பத்தெரிவுகளை முன்கூட்டியே பதிவிடுவதற்கு
- பரிந்துரைக்கப்பட்ட ஒரு ஆதரவு நபரை நியமிப்பதற்கு
- இன்னொரு மனநலமருத்துவரின் கருத்தைப் பெறுவதற்கு

Interpreter

- சட்ட ஆலோசனை பெறுவதற்கு
- Mental Health Tribunal (மனநலத் தீர்ப்பாயத்திற்கு) விண்ணப்பிப்பதற்கு
- மனநலம் மற்றும் நல்வாழ்வு சேவை அமைப்பைப் பற்றி புரிந்துகொள்வதற்கும் அணுகவும்
- உங்கள் மனநலம் மற்றும் நல்வாழ்வு சேவைகள் மற்றும் பிறருக்கும் உங்கள் முடிவுகள், கருத்துக்கள் மற்றும் விருப்பத்தெரிவுகளை வெளிப்படுத்துவதற்கு
- நீங்கள் முறையிடுவதானால்

நாம் ஒரு மொழிபெயர்ப்பாளரை ஏற்பாடு செய்யலாம். Translating and Interpreting Service (மொழிபெயர்த்தல் மற்றும் மொழிபெயர்த்துரைப்புச் சேவை) (TIS) இனையும் அழைக்கலாம். 131 450 எனும் எண்ணை அழைத்து, எம்முடன் தொடர்பு ஏற்படுத்தக் கோரவும்.

IMHA ஆனது உங்கள் சம்மதத்துடன் உங்களது கருத்துக்களை, மனநலம் மற்றும் நல்வாழ்வு சேவையில் பிரதிநிதித்துவப்படுத்தலாம்.

உங்கள் IMHA வழக்கறிஞர்:

- உங்கள் வழிகாட்டலின் படி இயங்குவார்
- உங்கள் சம்மதமின்றி எந்த நடவெடிக்கையும் எடுக்கமாட்டார்
- நீங்கள் குறைந்தது 16 வயதுடையவராக இருந்தால், உங்கள் நலன்களுகளாக இருக்கக்கூடும் என்று மற்றவர்கள் கருதும் விடயங்களால் வழிநடத்தப்பட மாட்டார்கள். நீங்கள் 15 வயது அல்லது அதற்கு குறைவான வயதுடையவராக இருந்தால், உங்கள் நலன்கள் பாதுகாக்கப்படுவதை உறுதி செய்வதற்காக IMHA உங்கள் கருத்துக்களை ஊக்குவிக்கும் மற்றும் உங்கள் குடும்பத்தினர், பராமரிப்பாளர்கள் மற்றும் ஆதரவாளர்களுடன் இணைந்து பணியாற்றும்.

## உங்களை தொடர்பு கொள்ள வேண்டாம் என்று எம்மிடம் கூறுங்கள்

உங்களைப் பற்றிய அடையாளம் காணும் தகவலை நீங்கள் வழங்க வேண்டும், இதன் மூலம் நாங்கள் இவற்றை உறுதிசெய்ய முடியும்:

- உங்களைத் தொடர்பு கொள்ள முயற்சிக்காமல் இருப்பது, மற்றும்
- உங்கள் கட்டாய சிகிச்சை பற்றி நாங்கள் பெற்ற தகவலை அழிப்பது

நீங்கள் எங்களுக்கு வழங்கும் தகவல் எமது நிர்வாக ஊழியர்களால் கையாளப்படும். தனிப்பட்ட தகவல்களை நாங்கள் எவ்வாறு கையாள்வது மற்றும் உங்கள் தனியுரிமையைப் பாதுகாப்பது எப்படி என்பதை அறியவதற்கு, https://www.imha.vic.gov.au/how-we-handle-personal-information வலைப்பக்கத்தைப் பார்வையிடவும்.

உங்களை தொடர்பு கொள்ள வேண்டாம் என்று எங்களிடம் கூறுவதற்கு:

- 03 9093 3701 எனும் எண்ணை அழைக்கவும்
- opt-out form இனை நிரப்புவதற்கு www.imha.vic.gov.au/optout எனும் வலைப்பக்கத்தைப் பார்வையிடவும்
- பின்வரும் படிவத்தை பூர்த்தி செய்து அதனை இந்த மின் அஞ்சல் முகவரிக்கு அனுப்பவும் imhaadmin@imha.vic.gov.au அல்லது அஞ்சல் வழியாக அனுப்பவும்:

Independent Mental Health Advocacy

GPO Box 4380

Melbourne VIC 3001

- பின்வரும் ஒப்புதல் அறிக்கை மற்றும் தகவலுடன் imhaadmin@imha.vic.gov.auஎனும் மின்னஞ்சல் முகவரிக்கு எங்களுக்கு அனுப்பவும்.

படிவத்தைச் சமர்ப்பிக்க உதவுமாறு பணியாளர் ஒருவரை அல்லது ஆதரவாளரிடம் நீங்கள்

நான், ________________________________கட்டாய சிகிச்சை உத்தரவில் அல்லது வேறு ஏதேனும் முக்கிய நிலைகளில் நான் இடப்பட்டிருந்தால் *IMHA* என்னைத் தொடர்பு கொள்ளவதை விரும்பவில்லை. எனது கட்டாய சிகிச்சை குறித்து எதிர்காலத்தில் *IMHA* பெறும் தகவல்கள் அழிக்கப்படும் என்பதை இதன் மூலம் புரிந்துகொள்கிறேன்.

பிறந்த தேதி: ______________________

கையொப்பமிடப்பட்டது: ______________________

தேதி: ______________________

மாநிலம் தழுவிய UR எண் (State-wide UR Number) - SWURN: ______________________

பொது நியமிக்கப்பட்ட மனநலச் சேவைகளை அணுகும் அனைத்து நுகர்வோருக்கும் ஒதுக்கப்படும் தனித்துவமான எண் இதுவாகும். உங்களைச் சரியாக அடையாளம் கண்டுகொள்ள நாம் இந்த எண்ணைப் பயன்படுத்துகிறோம். உங்களுடைய SWURN உங்களுக்குத் தெரியாவிட்டால், உங்கள் மனநலம் மற்றும் நல்வாழ்வு சேவையைக் கேட்கலாம் அல்லது யாரைக் கேட்க வேண்டும் என்பது பற்றிய தகவலுக்கு IMHA இனை அழைக்கலாம்.

தொலைபேசி எண்: ______________________

மின்னஞ்சல்: ______________________

முகவரி: ______________________

புறநகர்/நகரம்: ______________________

அஞ்சல் குறியீடு: ______________________

நீங்கள் பின்னர் உங்கள் எண்ணத்தை மாற்றிக்கொண்டுவிட்டீர்கள், கட்டாய சிகிச்சையைப் பெறும்போது IMHA இனைத் தொடர்பு கொள்ள வேண்டும் என விரும்பினால், நீங்கள்:

- 1300 947 820 எனும் எண்ணை அழைக்கலாம்
- மின்னஞ்சல் imhacontact@imha.vic.gov.au
- www.imha.vic.gov.au என்ற இணையதளத்தைப் பார்க்கவும்

## IMHA இற்கு எப்போது அறிவிக்கப்படும்?

IMHA இற்கு அறிவிக்கப்படும், எப்போதெனில்:

- தடயவியல் அல்லது பாதுகாப்பு நோயாளியாக இருந்தால், நீங்கள் ஒரு தற்காலிக சிகிச்சை உத்தரவு அல்லது ஒரு சிகிச்சை உத்தரவில் இடப்பட்டுள்ளீர்கள் எனில்
- தொடர்புகொள்வதற்கான உங்கள் உரிமை கட்டுப்படுத்தப்பட்டுள்ளபோது

- உங்கள் தற்காலிக சிகிச்சை உத்தரவு, அல்லது சிகிச்சை உத்தரவு, சமூகத்தில் இருந்து உள்நோயாளி அல்லது உள்நோயாளியில் இருந்து சமூகத்திற்கு என மாறுபடும்போது
- உங்கள் தற்காலிக சிகிச்சை உத்தரவு அல்லது சிகிச்சை உத்தரவு இரத்து செய்யப்பட்டிருந்தால் அல்லது இடைநிறுத்தம்செய்யப்பட்டிருந்தால்
- உங்களுக்கு ஒரு Mental Health Tribunal விசாரணை திட்டமிடப்பட்டிருந்தால்
- கட்டுப்படுத்தப்பட்ட தலையீடு பயன்படுத்தி நீங்கள் தனிமையில் வைக்கப்பட்டிருந்தால், அல்லது உடல் ரீதியாக அல்லது இரசாயன ரீதியாக கட்டுப்படுத்தப்பட்டிருந்தால்,
- வேறு நியமிக்கப்பட்ட மனநலச் சேவையில் சிகிச்சைக்காக உங்களை மாற்றுவதற்காக உங்கள் உத்தரவு மாற்றப்பட்டால்.

நீங்கள் ஒரு பாதுகாப்பு நோயாளியாக இருந்தால், IMHA இற்கு அறிவிக்கப்படும்:

- நீங்கள் ஒரு நியமிக்கப்பட்ட மனநலச் சேவைக்கு, அனுமதிக்கப்பட்டுள்ளீர்கள் அல்லது அங்கு கொண்டு செல்லப்படுகிறீர்கள்
- சிகிச்சையின் பின்னர் நீங்கள் மீண்டும் சிறைக்கு அனுப்பப்படுகின்றீர்கள்

நீங்கள் ஒரு தடயவியல் நோயாளியாக இருந்தால், இச்சந்தர்பங்களில் IMHA இற்கு அறிவிக்கப்படும்:

- தடயவியல் அனுமதி குழு போக்குவரத்தை அங்கீகரித்தால் அல்லது அங்கீகரிக்கப்பட்ட அமைப்பால் இயக்கப்பட்டால் தவிர, நீங்கள் நியமிக்கப்பட்ட மனநல சேவைக்கு கொண்டு செல்லப்படுகிறீர்களென்றால்
- உங்கள் மனநல மருத்துவர் அல்லது தலைமை மனநல மருத்துவர் உங்களை வேறொரு நியமிக்கப்பட்ட மனநல சேவைக்கு அழைத்துச் செல்லுமாறு பணித்திருந்தால்
- Forensicare Victorian Institute of Forensic Mental Health (விக்டோரியன் தடயவியல் மனநல நிறுவனம்) உத்தரவு இடப்படுபடுமானால், மேலும் இடப்படுகின்றபோது, ஒரு தீவிர கண்காணிப்பு மேற்பார்வை உத்தரவுக்காக மனநல தீர்ப்பாயத்திற்கு பொருந்தும்.

## IMHA இனை எவ்வாறு தொடர்புகொள்வது மற்றும் அது பற்றி மேலும் அறிந்துகொள்வது எப்படி

- www.imha.vic.gov.au என்ற இணையதளத்தைப் பார்வையிடவும் அல்லது imhacontact@imha.vic.gov.au இற்கு மின்னஞ்சல் அனுப்பவும்
- IMHA தொலைபேசி இணைப்பு **1300 947 820**, இனை அழைக்கவும், இது IMHA வழக்கறிஞர்களால் வாரத்தில் ஏழு நாட்களும் (பொது விடுமுறை நாட்கள் தவிர) 9:30am – 4:30pm அழைப்புகள் ஏற்கப்படும்.
- உங்கள் உரிமைகள் பற்றிய பதிவைக் கேட்க IMHA உரிமைகள் இணைப்பு - இனை **1800 959 353** எனும் எண்ணில் அழைக்கவும்.
- IMHA இனைத் தொடர்புகொள்வதற்கு உதவ மனநல சேவை வழங்குநர், பராமரிப்பாளர் அல்லது பிற ஆதரவு தருபவர்களிடம் கேளுங்கள்.
- IMHA பற்றி கருத்து தெரிவிக்க அல்லது முறையீடு செய்ய விரும்பினால், தயவுசெய்து எங்களை தொடர்பு கொள்ளவும் அல்லது எங்கள் இணையத்தளத்தின் பின்னூட்டம் பகுதியைப் பார்வையிடவும்.
- 131 450 என்ற எண்ணை அழைத்து, பின்னர் 1300 947 820 என்ற எண்ணில் எங்களை அழைக்கச் சொல்வதன் மூலம் இலவச மொழிபெயர்த்துரைப்பாளரை அணுகவும்.